# மட்டக்களப்பில் 19 ஆம் நூற்றாண்டின் கல்வி நடவடிக்கைகள் - வரலாற்றுப் பார்வை

Ms.Paul Jesukumar Chrisdina Nirojini

Temporary Assistant Lecturer, Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

nirojinic@gmail.com

## Abstract

மட்டக்களப்பில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சி இடம்பெற்றுள்ளது. அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார ரீதியாக ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு மட்டக்களப்பும் விதிவிலக்கல்ல. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களைவிட பிரித்தானியராட்சியில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு கிறிஸ்தவ மிஷனரிமாரின் வருகையும் அவர்களுடைய சேவைகளும் குறிப்பிடத்தக்கன. 19, 20 ஆம் நூற்றாண்டுகளின் முற்பகுதியில் இவர்களது பணிகள் இடம்பெற்றன. மட்டக்களப்பில் 19 ஆம் நூற்றாண்டில் மாற்றங்களைத் தோற்றுவித்த கல்விச்சேவைகள், அதனால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட சமூகநிலை மாற்றங்களை ஆவணப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு முறையானது வரலாற்றடிப்படையில் அமைந்துள்ளது. பிரித்தானிய ஆவணங்களை முதல்நிலைத் தரவுகளாகக் கொண்டும் ஏனைய நூல்கள், கட்டுரைகள், இணையத்தள தகவல்களை இரண்டாம்நிலைத் தரவுகளாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

Key words: மட்டக்களப்பு, 19 ஆம் நூற்றாண்டு, பாடசாலைகள்

### 1. 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரான கல்வி நிலை

மட்டக்களப்பில் போத்துக்கேயர் காலத்திற்கு முன்பதாக நிலவிய கல்வி முறை பற்றிச் சரியாக ஒழுங்கமைக்கப்படவில்லை. அந்தக் காலப்பகுதியில் காகிதங்களும் காணப்படவில்லை. பாரம்பரிய கல்விமுறை காணப்பட்டது. மட்டக்களப்பில் பாரம்பரிய கல்வி முறையாக திண்ணைப் பள்ளிக் கல்வி முறை நிலவியது. ஆனாலும் இதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதியில் பாடப்பட்ட முக்கிய ஆவணமான எண்ணெய்சிந்து மூலமாக திண்ணைப் பள்ளிக் கல்வி முறை காணப்பட்டமையை பேராசிரியர். செ. யோகராஜா எடுத்துக்காட்டுகின்றார்.(யோகராசா,செ., 2004 : 2)

திண்ணைப் பள்ளிகளில் கல்வி போதிக்கும் ஆசிரியருக்கு வேதனம் வழங்குவது வழமையாக எதிர்பார்க்கப்பட்டதொன்றாகும். ஆண் கல்வி முறை முக்கியத்துவம் பெற்றது. மட்டக்களப்பில் பிரித்தானியராட்சி நிலவிய காலப்பகுதியில் மண்டூர், வெல்லாவெளி, கோயில்போரதீவு முதலான படுவான்கரைப் பிரதேசங்களில் திண்ணைப் பள்ளிகள் இயங்கின. கிறிஸ்தவமிஷனரி ஊடாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது அப்பகுதிப் போடிகளும் கிராம மக்களும் எதிர்த்தமை பற்றி வெல்லவூர்க்கோபால் குறிப்பிடுகின்றார். (வெல்லவூர்க்கோபால், 2012 : 56,57)

குரு சீட முறையில் மரபுசார் கல்வி முறைகளாகிய மாந்திரிகம், வைத்தியம், சோதிடம் தொடர்பான கல்வி முறையும் மட்டக்களப்பில் பரம்பரை வழியாக இரகசியமான முறையில் பேணப்பட்டு வந்துள்ளது. மட்டக்களப்புப் பிராந்தியங்களில் ஜாதகக் குறிப்புக்கள் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டமைக்குரிய சான்றுகளும் காணப்படுகின்றன. ஒரு சிறு குழு மட்டுமே இக்கல்வி முறையில் தேறினர். அவர்கள் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளத் தயாராகவில்லை.

### 2. 19 ஆம் நூற்றாண்டின் கல்வி நடவடிக்கைகள்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் சமயத்தைப் பரப்புவதற்குரிய சாதனமாக கல்வி பயன்படுத்தப்பட்டது. அது போன்று பிரித்தானியராட்சியில் மிஷனரிமார் தமக்குரிய ஊடகமாக கல்வியைப் பயன்படுத்தினர். 1814 ஆம் ஆண்டிலிருந்து மெதடிஸ்த திருச்சபைப் பாடசாலைகளும் 1872 ஆம் ஆண்டிலிருந்து கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலைகளும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவத் தொடங்கின. ஆங்கிலம் கற்றவர்கள் அரசிடம் பதவிகளையும் சலுகைகளையும் பெற்றதனால் பலர் தமது சமயத்தை மாற்றிக்கொண்டு ஆங்கிலக்கல்வியை பெற வேண்டிய சூழலும் ஏற்படுத்தப்பட்டது.

சமூதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு நவீனத்துவமான சிந்தனைக்கு இட்டுச்செல்ல பாடசாலைகள் வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது. தெடிஸ்த கல்லூரி, வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை போன்றன மட்டக்களப்பு மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்ற பாடசாலைகளாகத் திகழ்ந்தன.

வணக்கத்திற்குரிய கலாநிதி தோமஸ் குக்கின் தூண்டுதலினால் வணக்கத்திற்குரியோர்களான பெஞ்சமின் கிளவ், மார்டின் ஹவாட், வில்லியம் ஓல்ட், ஜோர்ச் ஏர்ஸ்கைன், தோமஸ் ஸ்குவன்ஸ், ஜேம்ஸ் லின்ஞ் என்போர் 1814 யூலை 11 இல் இலங்கை வந்தடைந்தனர். மட்டக்களப்பில் வில்லியம் ஓல்டின் வருகையைத் தொடர்ந்து மெதடிஸ்த திருச்சபை வரலாறும், பணிகளும் ஆரம்பமாகியது.

முதலாவது ஆங்கிலப் பாடசாலையாக புளியந்தீவில் மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரி வில்லியம் ஓல்டினால் 1814 இல் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பமாகியது. அரசினால் வழங்கப்பட்ட அரச களஞ்சியத்தில் இப்பாடசாலை அமைக்கப்பட்டது. 1819 காலப்பகுதியில் 21 மாணவர்கள் காணப்பட்டதாக தோமஸ் ஒஸ்பேர்ன் அறிக்கை குறிப்பிடுகின்றது. 1823 இல் ஓர் ஆசிரியர் 23 மாணவர்களையும் கொண்ட இப்பாடசாலையானது 1833 இல் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது.

மட்டக்களப்பிற்கு வருகைதந்த ஜோன் மெக்கன்சி (1816), தோமஸ் ஒஸ்பேர்ன் (1817) என்போர் கிராமங்கள் தோறும் கல்வியைப் போதிக்க தாய்மொழிப் பாடசாலைகளையும் அமைத்தனர். ஜனசஞ்சமில்லாத பகுதிகளில் உண்மையில் குறைந்தளவு பாடசாலைகள் காணப்பட்டன. கிராமப்பகுதிகளில் மக்களின் போதிய ஒத்துழைப்பின்மையால் அப்பணிகள் உடனடியாகக் கைகூடவில்லை.(Administration Reports of Eastern Province, 1875)

பெண்களுக்கான கல்வியும் தங்களுக்கேற்ற சூழ்நிலையிலிருந்து பெற வேண்டும் என்ற நோக்கோடு பெண்களுக்கான முதல் பாடசாலையாக வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையை 1820 இல் அமைத்தனர். 1820 – 1876 வரையான காலப்பகுதியில் மிஷனரிமார்களின் மனைவிகளின் பொறுப்பிலிருந்து 1876 அதிபர் பொறுப்பில் பாடசாலை நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

மெதடிஸ்த திருச்சபையினரின் முக்கிய சேவைத்தளமாக கல்முனைப் பிரதேசம் காணப்பட்டது. இங்கு G.J. றிம்மர் என்பவர் பெண்களுக்கு விடுதிப் பாடசாலையை உருவாக்கினார். 1833 இல் 18 மாணவர்களுடன் கல்முனைப் பிரதேசத்தில் முதலாவது பாடசாலையாக உருவாகியது. கப்ரியேல் லீஸ் என்பவர் 1901 ஆம் ஆண்டு ஆங்கிலப் படசாலையாக லீஸ் கல்லூரியை உருவாக்கினார். இவ்விரு பாடசாலைகளும் இணைக்கப்பட்டு 1948 ஆம் ஆண்டு உவெஸ்லி உயர்தரப் பாடசாலையாக மாற்றம் பெற்றது. ஆனால் இன்று இக்கல்லூரி அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது.

1873 இல் கல்வி வரலாற்றைப் பொறுத்தவரையில் கத்தோலிக்க சமயத்தாரால் புனித மிக்கேல் கல்லூரி, புனித மரியாள் தமிழ்ப் பாடசாலை, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை, கோட்டைமுனையில் கலவன் பாடசாலை, வீச்சுக் கல்முனை புனித அன்னம்மாள் கலவன் பாடசாலை போன்றன அமைக்கப்பட்டன. புனித மிக்கேல் கல்லூரி வண. சேபியர் அடிகளால் 1872 இல் 57 மாணவர்களையும் 3 ஆசிரியர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. புனித சிசிலியா ஆங்கிலப் பாடசாலை அருட்தந்தை J. பிரான்சிஸ் சேபியர் என்பவரால் 1876 இல் 69 மாணவிகளுடன் உருவாக்கப்பட்டது.

1896 ஆம் ஆண்டில் ஆரையம்பதியில் மெதடிஸ்த திருச்சபையால் ஆரம்பப் பாடசாலை உருவாக்கப்பட்டது.(சபாரெத்தினம். க., 2014 : 103) 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாங்கேணி, பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி, கல்முனை ஆகிய இடங்களில் மிஷனரியினரால் பாடசாலைகள் அமைக்கப்பட்டன.(மத்தியூ.எஸ்.ஏ.ஜ., 1999 : 45) ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு தகுதி வாய்ந்தோராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவு செய்யும் முகமாக அரசடியில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தனர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் வி.குமாரசுவாமியின் நிர்வாக அறிக்கையின்படி இலங்கை சுதந்திரம் பெறும் வரையில் மெதடிஸ்த பாடசாலைகள் 49, கத்தோலிக்க பாடசாலைகள் 44, இலங்கைத் திருச்சபைப் பாடசாலைகள் 8, இராமகிருஷ்ன மிஷன் பாடசாலைகள் 8, இந்து

கல்விச்சாலை 1 என்ற தன்மையில் காணப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றார். இதன் மூலம் 19 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட கல்வி வளர்ச்சியின் தாக்கமே பாடசாலைகளின் உருவாக்கத்திற்கு காரணம் எனலாம்.

19 ஆம் நூற்றாண்டில் இம்மாவட்ட கல்வி வளர்ச்சியில் தாய்மொழி பாசையில் கற்பிக்கப்படும் அரச பாடசாலைகளும், மிஷனரிமாரால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளும் உருவாகின. இதனை 1898 நிர்வாக அறிக்கையின்படி மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள் மேல்வருமாறு அமைகின்றன.

| | Wesleyan | Church of England | Roman Catholic | Sivite | Mohammedan | Total |
|---|---|---|---|---|---|---|
| **English** | | | | | | |
| Number of Schools | 02 | 01 | 01 | -- | -- | 04 |
| Number of boys | 151 | 71 | -- | -- | -- | 222 |
| Number of girls | 16 | -- | 18 | -- | -- | 34 |
| **Vernacular** | | | | | | |
| Number of Schools | 72 | 06 | 19 | 17 | 63 | 177 |
| Number of boys | 3888 | 231 | 570 | 373 | 1290 | 6352 |
| Number of girls | 787 | 43 | 271 | 15 | 97 | 1213 |
| **Anglo – Vernacular** | | | | | | |
| Number of Schools | 05 | -- | 01 | 02 | -- | 08 |
| Number of boys | 91 | -- | 66 | 49 | -- | 206 |
| Number of girls | 156 | -- | -- | 03 | -- | 156 |
| **Total Number of Schools** | **79** | **07** | **21** | **19** | **63** | **189** |
| **Total Number of boys** | **4130** | **302** | **636** | **422** | **1290** | **6780** |
| **Total Number of girls** | **959** | **43** | **289** | **18** | **97** | **1406** |

ஆரம்ப காலத்தில் தொழிற்கல்வியும் முக்கியத்துவம் பெற்றமையை அறியமுடிகின்றது. S.O. கனகரெட்ணம் எழுதிய Monography of the Batticaloa District of the Eastern Province எனும் நூலில் காணலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு கைத்தொழில் கற்பிக்கும் பாடசாலைகளும், இரண்டு பயிற்சியளிக்கும் பாடசாலைகளும் காணப்பட்டன எனக் குறிப்பிடுகின்றார். ரோமன் கத்தோலிக்க மிஷன் பொறுப்பில் இயங்கும் பெண்கள் கைத்தொழில் பாடசாலையில் தையல், லேஸ் தயாரிப்புக்களும், ஆண்களுக்கான பாடசாலைகளில் அச்சுவேலை, புத்தகம் கட்டுதல், தச்சு வேலைகளும் கற்பிக்கப்பட்டன எனக் குறிப்பிடுகின்றார். 1881 இல் கல்முனைப் பிரதேசத்தில் மேசநெறிக்கான ஒரு பாடசாலை அமைக்கப்பட்டது. (Matthew.S.A.I., 2013 : 125) 1889 இல் செயல்முறைக் கைத்தொழில் பாடசாலை கல்லாற்றில் உருவாக்கப்பட்டது. இங்கு வெண்கலம், கொல்லன், தச்சு வேலை போன்றவற்றிற்கு துறைசார் பயிற்சி அளிக்கப்பட்டது. 1898 அரசாங்க அதிபரின் அறிக்கையின்படி மட்டக்களப்பில் தச்சுத் தொழில் பாடசாலை செயற்பட்டமை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

### 3. கல்வி வளர்ச்சியால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள்.

19 ஆம் நூற்றாண்டில் கல்வி வளர்ச்சியானது பல மாற்றங்களைத் தோற்றுவித்தது. மட்டக்களப்பில் சாதிக்கட்டுப்பாடுகள் இறுக்கமடைந்திருந்தன. இக்கால கட்டத்தில் ஏற்பட்ட இச்சமய நிறுவனங்களின் கல்வியின் பயனாக சாதிப் பாகுபாடுகளின் இறுக்கம் ஓரளவு தளர்ச்சியடைந்தது. மனிதர்கள் யாவரும் சமம் என்ற கருத்தினை கிறிஸ்தவக்கல்வி வலியுறுத்தியது. இத்தகைய சமத்துவக் கருத்துக்களால் கலப்புமணமும் இடம்பெறலாகின.

ஆங்கிலக்கல்வியைப் பெறுவதற்காக மக்கள் பலர் சமயம் மாறினர். அதனூடாக அரசாங்க கருமங்களை மேற்கொண்டனர். சமூதாயத்தில் உயர் அந்தஸ்தினராக கருதப்பட்டதோடு ஓர் படித்த வலுவான சமூதாயம் உருவாக்கம் பெற்றது.(மத்தியூ.எஸ்.ஏ.ஐ., 1999 : 46) மாறாக குரு சீட கல்விமுறைத் தொடர்புகள் பாதிக்கப்பட்டன. ஏட்டுக்கல்வி அடிப்படையிலும் அரசாங்க உத்தியோகத்தர் அடிப்படையிலும் சமூக அந்தஸ்து கணிக்கப்பட்டது.

நவீன மயமாக்கத்தின் அடையாளமாக 19 ஆம் நூற்றாண்டில் பெண்கல்வி தொடர்பான சிந்தனைகள் உருவாகின. பெண்களுக்காக அமைக்கப்பட்ட கல்லூரியில் வின்சன்ட் மகளிர் கல்லூரி முதன்மை பெற்றது. பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக பெண் விடுதி, பெண்கள் இல்லம் போன்றவற்றையும் அமைத்தனர். பெண்கள் பாடசாலைகளுடன் சேர்ந்து வளர்ந்த

சாரணியர் இயக்கம் சமூக உணர்வு வளர்ச்சிக்கு வழிவகுத்தது. முதலுதவி, முகாமிடுதல் போன்ற பயிற்சிகள் புதிய விடயங்களாக பெண்கள் மத்தியில் அறிமுகமாயின. வின்சன்ட் பாடசாலையில் அமைக்கப்பட்ட பெண்கள் சாரணியக்குழு இலங்கையில் புகழ் பெற்ற ஓர் குழுவாகவும் வளர்ச்சி கண்டது. பெண்கள் சமூக அரசியலில் ஈடுபட பெண்கல்வி அவசியமாகியது. 1920 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்ட பெண்கள் வாக்குரிமை சங்கம் இதன் முக்கிய பெறுபேறாகும்.

ஆங்கிலக்கல்வி என்ற போர்வையில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. இந்து சமயத்தைச் சார்ந்தவர்களே கத்தோலிக்க சமயத்தைப் புகட்டும் ஆசிரியர்களாகவும் காணப்பட்டனர். அனைவருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்க வேண்டும் என்ற கொள்கையில் மிஷனரிமார் வெற்றி கண்டனர். இந்துக்கள் சமயம் மாறிக்கொண்டமையானது அவர்கள் புதிய கலாச்சாரத்தை ஏற்கத் தயங்கவில்லை என்பதைப் புலனாக்குகின்றது. ஆனால் முஸ்லீம்கள் இறுக்கமான சமய கலாச்சாரக் கட்டுப்பாட்டிற்குட்பட்டு வாழ்ந்தமையால் மதமாற்றத்திற்கு பெரிதளவில் உட்படுத்தப்படவில்லை.

சுவாமி விவேகானந்தர் மட்டக்களப்பில் மேற்கொண்ட இந்து சமய பிரச்சார நடவடிக்கையால் இளைஞர்கள் மத்தியில் சுதேச இயக்கம் உருவாகியது. இவ்வியக்கம் சைவப் பாடசாலைகளை உருவாக்கி கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இச்சுதேச இயக்கத்தின் பணிகளை ஏ.பெரியதம்பிப்பிள்ளை எடுத்துக்காட்டுகின்றார். (பெரியதம்பிப்பிள்ளை.ஏ., 1982 : 28) கல்லடி, மொறக்கட்டாஞ்சேனை, புளியந்தீவு, ஆரையம்பதி, காரைதீவு, மண்டூர் முதலான கிராமங்களில் சைவப் பாடசாலைகளும் தோன்றின.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்தவ சமயத்திற்கும் கிறிஸ்தவ கல்விக்கும் எதிர்த்தாக்கமாக சமுதாயத்தில் இந்து சமய மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் சுவாமி விபுலானந்தரால் இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பமாகியது. மட்டக்களப்பிலும் இந்துக்கல்லூரி, சிவானந்தா வித்தியாலயம் என்பன தோற்றம் பெற்றன.(மத்தியூ.எஸ்.ஏ.ஐ., 1999 : 124) பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு மட்டக்களப்பில் ஆனைப்பந்திப் பெண்கள் பாடசாலையை அமைத்தனர். சுதேச இயக்கம், விவேகானந்த சபை, இராமகிருஷ்ன மிஷன் என்பவற்றின் பணிகளால் அறநெறிப் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன.

## 4. தொகுப்புரை

மட்டக்களப்பில் மிஷனரிமாரின் வருகை சமயத்தைப் பரப்பும் நோக்காகக் கொண்டது. அவர்கள் தங்கள் இலக்கையடைய கல்வியை முக்கிய ஊடகமாகக் கொண்டனர். மட்டக்களப்பில் சாதிமுறை ஓரளவு தகர்க்கப்பட்டு அனைவரும் கல்வி பெற முயன்றனர். குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டிலே பெண்கல்வி வளர்த்தெடுக்கப்பட்டது. 1505 இல் கத்தேலிக்க சமயம் மட்டக்களப்பில் பரப்பப்பட்டாலும் 1814 ஆம் ஆண்டில் மிஷனரியால் நிறுவப்பட்ட கல்விக்கூடங்கள் மூலமாகவே கல்விப்பணி வளத்தெடுக்கப்பட்டது. மிஷனரியின் கல்விக்கூடங்களை அரசு 1960 இல் பொறுப்பேற்றதனைத் தொடர்ந்து அரச முகாமையின் கீழ் ஒப்படைக்கப்பட்டது.

மட்டக்களப்பில் ஆரம்பகாலக் கல்வி முறையானது சைவப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது. தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தெடுப்பது கல்வியின் அடிப்படை நோக்கமாக அமைந்தது. மிஷனரியினரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி, கிறிஸ்தவக் கல்வி, தொழிற்கல்வி, விஞ்ஞானக்கல்வி, பெண்கல்வி என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து சமய மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக 20 ஆம் நூற்றாண்டில் சுதேச இயக்கம், விவேகானந்த சபை, இராமகிருஷ்ன மிஷன் என்பவற்றின் பணிகளால் இந்துப் பாடசாலைகளும் உருவாகின. இவற்றினூடாக மட்டக்களப்பில் 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய கல்வி நிலை வளர்ச்சியை அறிந்துகொள்ளமுடியும்.

## 5. உசாத்துணை


1. Administration Reports of Eastern Province, Blue Book, 1875
2. Administration Reports of Eastern Province, Blue Book, 1898

3. Canagaratnam.S.O., (1921). Monograph of the Batticaloa District of the Eastern Province, H.R.Cattle Government Printer, Ceylon.
4. Matthew.S.A.I., (2013). 200 years of Methodism in East Lanka, Golden offset Printers, Colombo.
5. கந்தையா.வீ.சி., (1964). மட்டக்களப்புத் தமிழகம், நினைவு வெயீடு மன்றம், இலங்கை.
6. சபாரெத்தினம். க., (2014). ஆரையம்பதி மண்(உள்ளதும் உரியதும்), ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.
7. பெரியதம்பிப்பிள்ளை.ஏ., (1982). உள்ளதும் நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம், மட்டக்களப்பு.
8. மத்தியூ. எஸ்.ஏ.ஐ., (1999). கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவர் ஆற்றிய கல்விப் பணி, பழைய மாணவர் சங்க வெளியீடு, கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை.
9. யோகராசா, செ., (2004). வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
10. வெல்லவூர்க்கோபால், (2012). வெல்லாவெளி வரலாறும் பண்பாடும், வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு.